
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1308

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

79

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# உண்மையை மறைக்க முடியாது!



‘பொய்யை உண்மையாக்குவது, உண்மையைப் பொய்யாக்குவது’ என்கிற மோசடி வரலாற்றின் மிக மோசமான பக்கங்களில், தமிழ்நாடு அரசியல் இன்றைக்கு சிக்கியிருக்கிறது. இத்தகைய மலிவான அரசியலற்ற அரசியலைச் செய்ய ஆயிரம் இன்ஸ்டாகிராம் கணக்குகளும், அந்தக் கணக்குகளுக்குக் கருத்துருவாக்கம் செய்துகொடுக்க மர்மமான குழுவும் இருந்தால் போதுமானது. அதைத்தான் தமிழ்நாடு இந்த த.வெ.க. ஆட்சியில் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதில், பலவற்றை கோமாளித்தனம் எனச் சிரித்துக் கடந்து விடுகிறோம். ஆனால், அவற்றில் சில பொய்கள், அவதூறுகள், தலைமுறைகளைத் தாண்டியும் நஞ்சைக் கக்கும் நயவஞ்சகம் கொண்டதாக இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான், த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் முஸ்தபாவின் சட்டமன்ற உரைகள்.

‘அப்படிப் பேச அனுமதிக்க முடியாது’ எனச் சபாநாயகரே மறுத்தாலும், மீண்டும் மீண்டும் அடுத்தடுத்த நாட்களில் அதையே திருப்பிச் செய்ய முயன்றார், முஸ்தபா. அந்த பச்சைப் பொய்யை உண்மையாக்கிட, போலி ஆதாரங்களை உருவாக்கிப் பரப்பும் சதிகளிலும் ஈடுபட்டார்கள். அவர்களுடைய நோக்கம் ஒன்றே ஒன்றுதான். இஸ்லாமியர்களை, தி.மு.க.விடமிருந்து அந்நியப்படுத்த வேண்டுமென்பது மட்டும்தான் அவர்களின் முழு நோக்கம். அதற்கான நஞ்சை, சட்டமன்றத்திலேயே இப்போது கக்கிவிட்டார்கள்.

உண்மையில், அவர் சொல்லும் கால கட்டங்களில் என்ன நடந்தது என்பது சட்டமன்றக் குறிப்புகளில் இருக்கிறது. இணையத்தில் நொடிப்பொழுதில், அந்த ஆவணத்தைப் பதிவிறக்கம் செய்துவிடலாம். ஆனாலும், அவர்களுக்குத் தேவை அதில் இருக்கும் உண்மையல்ல. அவர்களுடைய அரசியலுக்கு அறிவும் தேவையில்லை; உண்மையும் தேவையில்லை. அவதூறுகள் மட்டுமே போதுமானது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் அவதூறுகளைப் பரப்பி, அரசியல் செய்யும் இயக்கமல்ல; ஆணித்தரமான வாதங்கள்தான், நமது அரசியலின் பலம். நம்மிடம் வரலாறு இருக்கிறது, அந்த வரலாற்றில் உண்மை இருக்கிறது. அவற்றை ஆராய்ந்து, பதில் சொல்லும் வலிமையும் இருக்கிறது.

### அன்றைக்குச் சட்டமன்றத்தில் என்ன நடந்தது?

23.03.1999 அன்று, தீவிரவாத வழக்குகளில் கைதானவர்களுக்கும் சிறைக்காவலர்களுக்கும் இடையில் நடந்த மோதல் தொடர்பாகச் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. விவாதத்தின்போது, சிறைக்குள் நடந்த மோதல்கள் குறித்துப் பேசிய கம்யூனிஸ்ட் உறுப்பினர் கே.சுப்பராயன், “இத்தகைய தீவிரவாதத்தை வெறும் முஸ்லிம்கள் தீவிரவாதம் என்று மட்டும், ஒரு குறிப்பிட்ட எல்லை போட்டுப் பரிசீலித்துவிடக் கூடாது” என்று கூறினார். அப்போது எழுந்த புவனகிரி தொகுதியின் தி.மு.கழக சட்டமன்ற உறுப்பினர் அப்துல் நாசர், “இங்கே தீவிரவாதத்தைக் குறிப்பிடும்போது, ‘முஸ்லிம் தீவிரவாதிகள்’, ‘முஸ்லிம் தீவிரவாதிகள்’ என்று குறிப்பிடுகிறார்கள்; ‘தீவிரவாதிகள்’ என்ற அளவிலே குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்று குறுக்கீடு செய்தார்.

ஆனால், ‘நான் தவறாகச் சொல்லவில்லை, அப்படி யாரும் சொல்லிவிடக் கூடாது என்று தான் சொன்னேன்’ என சுப்பராயன் அதனை மறுக்க, சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், ‘அவர் தவறாகப் புரிந்து கொண்டார்’ என விளக்கினார். ஆனால், அதே விவாதத்தில் பேசிய பா.ஜ.க. உறுப்பினர் வேலாயுதன், ‘என்னுடைய சமயத்திற்காக நான் செய்கின்றேன், மதத்திற்காகச் செய்கின்றேன்; இது என்னுடைய ‘புனிதம்’ என்று சொல்லி, இதுபோன்ற தவற்றைச் செய்யக்கூடிய நிலையை வேறு எங்கும் கண்டதில்லை’ என அதே கருத்தை வேறு விதமான வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். அப்போது எழுந்த முத்தமிழறிஞர் கலைஞர், ‘சமயத்தின் பின்னணி எதிலும் இருக்கக்கூடாது; அதாவது, மதத்தின் பின்னணி இருக்கக்கூடாது என்பது மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்களுடைய வாதம். பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, எந்தப் பின்னணியிலே இடிக்கப்பட்டது?’ என அவருடைய பாணியிலேயே பதிலடி கொடுத்தார்.

‘யாராக இருந்தாலும் தீவிரவாதம் தீவிரவாதம்தான்; அது இந்துக்களுக்கும் பொருந்தும், மற்ற மதத்தினருக்கும் பொருந்தும்’ எனக் கூறி, சிறை மோதல் விவாதத்தை மத ரீதியான இந்து - முஸ்லிம் பிரச்சினையாகத் திசைதிருப்புவதைக் கண்டித்து, அந்த விவாதத்தை முடித்துவைத்தார், சபாநாயகர். அன்றைக்குச் சட்டமன்றத்தில் நடந்தது இதுதான். பா.ஜ.க. அப்படியொரு விமர்சனத்தை அன்று வைத்தபோது, அதிரடியாகப் பதிலடி கொடுத்து, ஒட்டுமொத்த இஸ்லாமியர்களையும் புண்படுத்தும் கருத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் கலைஞர். ஆனால், அன்றைக்கு அவதூறாகப் பேசிய பா.ஜ.க.வைக் கண்டிக்கத் துணிவில்லாமல், தி.மு.க.வின்மீது அபாண்டமான பழியை வீசி, பாசிசத்தை அவர்கள் தலைவர் விஜய்யைப் போலவே பாயாசமாகக் கருதிப் பருகியிருக்கிறார் முஸ்தபா.

### அவதூறுகளுக்கு முற்றுப்புள்ளி

இந்தப் பொய்யர்களின் அவதூறுகளை அப்படியே விட்டுவிட்டால், அடுத்தடுத்த தலைமுறைகளைப் பாதிக்கக்கூடிய நஞ்சாக மாறிவிடும் என்பதால், இவற்றை ஆதாரங்களுடன் விளக்கவேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. அன்றைக்கு மட்டுமல்ல, தன் வாழ்நாளில் என்றைக்குமே கலைஞர் இஸ்லாமியர்களை, மதத்தின் பெயரால் புண்படுத்தும் ஒற்றைச் சொல்லைக்கூட பயன்படுத்தியதில்லை. இன்னும் சொல்லப் போனால், மே 2, 2011 அன்று பாகிஸ்தானில், அல்-கொய்தா நிறுவனர் ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படையால் கொல்லப்பட்டார். அந்தச் சமயத்தில், ‘இஸ்லாமிய தீவிரவாதம்’ என்ற சொல் மீண்டும் தலைதூக்கியபோது, அந்த சொல்லைக் கண்டித்து, இஸ்லாமியர்கள் அல்லாதவர்களிடம் இருந்து வந்த வலுவான குரல் கலைஞருடையது.

“ஒசாமா பின்பற்றிய பயங்கரவாதத்திற்கு, ‘இஸ்லாமிய பயங்கரவாதம்’ என்ற லேபிளை ஒட்ட எத்தனையோ பேர் எத்தனிக்கின்றனர்; அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ‘இஸ்லாம்’ என்ற சொல்லுக்கு மற்றொரு பொருளே ‘சமாதானம்’ என்று, அன்றைக்குக் கலைஞர் கொடுத்த அறிக்கை தமிழ்நாட்டு இஸ்லாமியர்களைப் பெரிதும் ஆற்றுப்படுத்தியது. ஆனால், அதே பாகிஸ்தானுக்குப் போய் தீவிரவாதிகளைத் தூக்கி வருவதுபோன்ற காட்சிகளில் நடித்தவர்தான், இன்றைக்கு இருக்கக்கூடிய முஸ்தபாவின் தலைவர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அதை முஸ்தபாவே முன்னொரு காலத்தில் அம்பலப்படுத்தியும் இருக்கிறார் என்பதை அவரும் மறந்துவிடக் கூடாது. ஆனால், இப்போது ஆதாயத்திற்கு அவதூறு பரப்ப முயல்கிறார். அவர்கள் அவதூறுகளை வீசட்டும், நாம் உண்மைகளை வீசுவோம்; மக்கள் முன் அம்பலப்பட்டுப் போவார்கள்.

...நீளும்

> “தன் வாழ்நாளில் என்றைக்குமே கலைஞர் இஸ்லாமியர்களை, மதத்தின் பெயரால் புண்படுத்தும் ஒற்றைச் சொல்லைக்கூட பயன்படுத்தியதில்லை.”

## கவனம் ஈர்க்கும் ‘தி ஹார்டு லைன்’!

ஊடக உலகின் மாற்றுவெளி என்கிற அடையாளத்துடன், ‘தி ஹார்டு லைன்’ (The Hardline) என்கிற இணையதளம், சுயாதீன இதழியலில் கவனம் ஈர்க்கும் வகையில் வெளியாகிக் கொண்டிருக்கிறது. இன்றையப் பிரதான ஊடகங்கள் பேசத் தயங்கும் பல்வேறு விவகாரங்களை, இந்த இணையதளம் முதன்மைப்படுத்துகிறது. குறிப்பாக, விளிம்புநிலை மக்களின் பிரச்சினைகள், புலம்பெயர் தொழிலாளர்களின் அவலங்கள் மற்றும் மாணவர்களின் உரிமைக்குரல்களை இந்தத் தளம் தொடர்ச்சியாக கவனப்படுத்திவருகிறது.

தீவிர வலதுசாரி அரசியலின் பிம்ப கட்டமைப்புகளைத் தரவுகளுடன், இந்த இணையதளம் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வருகிறது. சமூக ஊடகங்களில் பரப்பப்படும் போலிச் செய்திகளின் பின்னணியை வெளிக்கொண்டுவருவதுடன், ‘அர்பன் நக்சல்’ போன்ற முத்திரை குத்தல்களுக்கு எதிராகவும், காத்திரமான கட்டுரைகளை வெளியிடுகிறது.

ஆழமான இடதுசாரிச் சிந்தனைகள், மார்க்சியத் தத்துவப் பின்புலம் மற்றும் மாற்று அரசியல் கருத்துகளுடன் தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் இதில் பங்களிப்பு செய்கின்றனர். தவிர, அவசியமான ஆங்கிலக் கட்டுரைகள் மற்றும் சர்வதேச அரசியல் நிகழ்வுகளைத் தமிழ் வாசகர்களுக்கு மொழிபெயர்த்துத் தருவதிலும் இத்தளம் கவனம் ஈர்க்கிறது. தவிர, குறிப்பிட்ட பெயரின்றி.. கூட்டு ஆசிரியர் குழுவாக (Editorial Desk) வெளியாகும் கட்டுரைகள், மிகத் துல்லியமான தரவுச் சரிபார்ப்புடன் வலதுசாரி போலிச் செய்திகளை அம்பலப்படுத்துகிறது.

தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் நீக்க முறைகேடுகள், ‘புதிய பாரதிய நியாய சன்ஹிதா’ (BNS) சட்டங்களின் பின்னணி ஆகியவற்றைத் தோலுரித்துக் காட்டும் கட்டுரைகளை, இந்தத் தளம் துணிச்சலுடன் வெளியிட்டுள்ளது. ‘டபுள் எஞ்சின்’ குஜராத்தில் சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கப்படுவது ஏன்?, ‘விஜய்’ பெயரில் இயங்கும் பாகிஸ்தான் ஃபேஸ்புக் கணக்குகள்! எனப் பல கட்டுரைகள் வெளிப்படையாக, வலதுசாரிகளின் முகமூடிகளை அம்பலப்படுத்தும் வகையில், வெளியிட்டுவருகிறது. தமிழ்ச் சூழலில் சர்வதேசத் தரத்திலான மாற்று ஊடக வெளியை இந்தச் செய்தி இணையதளம் உருவாக்கிவருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



வி.ராமநாதன்



### நகரக் கழகத்துக்குச் சொந்த இடம்!

1985-ஆம் ஆண்டு, திருவொற்றியூர் நகரக் கழகத்தின் சார்பில், நகரக் கழக அலுவலகத்திற்கு இடம் வாங்குவதற்காக, நிதி வசூல்செய்து, ஒரு இலட்சம் ரூபாயை தலைவர் கலைஞர் அவர்களிடம், அன்றைய நகரக் கழகச் செயலாளராக இருந்த டி.கே.பழனிச்சாமி, நகர அவைத் தலைவர் கே.பரசுராமன் முன்னிலையில், அப்போது நகரக் கழகப் பொருளாளராக இருந்த நான், கழக நிர்வாகிகளோடு இணைந்து பணமுடிப்பைத் தலைவரிடம் அளித்தோம். அதற்காக, திருவொற்றியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில்.. தலைவர் பொன்னாடை அணிவித்துப் பாராட்டி மகிழ்வித்த தருணம்.

– வி.ராமநாதன், முன்னாள் நகர மன்றத் துணைத் தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர், சென்னை வடகிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### குதிரையைப் போல ஓட விட்டு...

1977-ஆம் ஆண்டு, மிசா காலத்து சென்னை மத்திய சிறைக் கொடூரங்களை விசாரிக்க, அமைக்கப்பட்ட நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில் கமிஷன் விசாரணையில், கா.வேழவேந்தன் உள்ளிட்ட தலைவர்கள், சென்னை மத்திய சிறையில் ஏற்பட்ட கொடூரமான அனுபவங்களைச் சாட்சியமாக அளித்தனர். “சிறை அதிகாரிகள், கைதி ஒருவரை குதிரையைப் போல ஓடவிட்டு சவுக்கால் அடித்தனர்” என்ற அதிர்ச்சியூட்டும் சாட்சியத்தை வேழவேந்தன் பதிவு செய்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900